**பாரதிய ஜனதா கட்சி**

**மத்திய அலுவலகம்**

**11, அசோக் சாலை, புதுதில்லி -01**

**06 மார்ச் 2014**

## திருமதி.மீனாட்சி லேகியின் அறிக்கை

காங்கிரஸ் கட்சியின் தந்திர உத்திகள் துறையால் சமீபத்தில் அமர்த்திக்கொள்ளப்பட்ட அடியாட்களாக ஏ.ஏ.பி கட்சி( ஆம் ஆத்மி கட்சி) விளங்குகிறது. குஜராத்தில் கெஜ்ரிவால் தொடர்பான ஒரு சிறிய நிகழ்வு ஏதோ தேசிய பாதுகாப்புக்கு ஏற்பட்ட பாதிப்பு போல் பெரிதாக்கப்படுகிறது . ஏனெனில் ஒவ்வொரு முறை தனது புதிய ஊழல் வெளிச்சத்துக்கு வரும் போதெல்லாம் பிளவு ஏற்படுத்த முயற்சிப்பதே காங்கிரஸ் கட்சி கடைபிடித்து வரும் திசைத்திருப்பும் உத்தியாக இருக்கிறது. ஏ.ஏ.பி, பா.ஜ.க.விற்கோ, மோடிக்கோ அச்சுறுத்தல் இல்லை. அந்த கட்சி தேசிய அளவில் செல்வாக்கு உள்ள கட்சியும் அல்ல. அந்த கட்சி தொடர்பான எல்லாமே மர்மமாக இருக்கிறது. அக்கட்சிக்கு நிதி வரும் முறையும் தான். அந்த கட்சியின் முக்கிய உறுப்பினர்கள், கூடுதல் அதிகாரம் பெற்ற சோனியா காந்தியின் அமைப்பான என்.ஏ.சி.யை சேர்ந்தவர்கள். அவர்கள் கோட்பாடு தீவிரவாதத்தன்மை கொண்டது. பல உறுப்பினர்கள் இந்திய அரசுக்கு எதிரான செயல்பாடுகளை கொண்டவர்கள். இது தான் ஏ.ஏ.பி கட்சியின் லட்சனம். காங்கிரஸ் கட்சியின் பேரணிகளில் கூட்டம் குறைந்து வருவதை மறைப்பதற்காகவே ஏ.ஏ.பி கட்சியை அவிழ்த்து விட்டுள்ளனர். காங்கிரஸ் கட்சிக்கு காத்திருக்கும் மோசமான எதிர்காலத்தின் அடையாளமாகவும் இது அமைந்துள்ளது.

2. 2004 ல் , அப்போதைய துணைப்பிரதமர் அத்வானி, பாட்னா மாஜிஸ்திரேட்டால் தடுத்து நிறுத்தப்பட்ட போது இவ்வாறு கூறினார். " **இரவு 10 மணிக்கு என் உரையை முடித்துக்கொண்டு தேர்தல் நடத்தை விதிகளை மதித்து நடப்பேன்.** அக்டோபர்

மாதம் பாட்னாவில் குண்டுகள் வெடித்தன. **5 பேர் பலியானார்கள். பா.ஜ.க எந்த வன்முறையிலும் ஈடுபடவில்லையே**. சட்டத்தின் விதிகள் பின்பற்றப்பட்ட்தால் பா.ஜ.க எந்த எதிர்வினையும் தெரிவிக்கவில்லை. இதை ஏ.ஏ.பி கட்சி நடந்து கொண்ட விதத்துடன் ஒப்பிட்டுப்பாருங்கள். நாங்கள் சட்டத்தை மதிப்பவர்கள். அரசின்மைவாதிகள் அல்ல. தேர்தல் நடத்தை விதிகள் அமலில் இருக்கும் போது கெஜ்ரிவால் அதை மதித்து நடக்க வேண்டும். கெஜ்ரிவாலை தடுத்து நிறுத்துவது தேர்தல் கமிஷனின் உத்தரவு. **நம் நாடு லிபியா, சிரியா போல இருப்பதையா விரும்புகிறோம்.**

3. தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டவுடனேயே, பிரச்சாரத்தை நெறிப்படுத்தும் நடத்தை விதிகள் அமலுக்கு வந்து விடுகின்றன. அரசியல் மற்றும் தேர்தல் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளுக்கும் காவல்துறை மற்றும் மாவட்ட நிர்வாகம் தேர்தல் கமிஷனுக்கு பதில் சொல்ல வேண்டும். அரவிந்த் கெஜ்ரிவால் கைது செய்யப்படவோ காவலில் வைக்கப்படவோ இல்லை. அவருக்கு எதிராக வழக்கும் பதிவு செய்யப்படவில்லை. அவரது நிகழ்ச்சி திட்டத்திற்கு விளக்கம் கேட்டே நிறுத்தப்பட்டார். நடத்தை விதிகளின் படி அனுமதி பெறுமாறு கோரப்பட்டார். **மேலும் காவல்துறை சட்டப்படி தனது கடமையை செய்வது தானே சரியானது. இந்த மனிதர் முன்னாள் ஐ.ஆர்.எஸ் அதிகாரி என்பதால் பார்த்துக்கொண்டிருக்க முடியுமா? வருவாய்த்துறை உட்பட அனைத்து துறைகளில் இருந்தும் தான் தேர்தல் கமிஷன் அதிகாரிகளை அழைத்துக்கொள்கிறது. ஒன்று அவர் இந்த நடைமுறைகளை அறியாமல் இருக்க ,இத்துறையில் பணியாற்றாமல் இருந்திருக்க வேண்டும் அல்லது எல்லாம் தெரிந்திருந்தும் காங்கிரஸ் கட்சியின் கீழ்த்தரமான உத்திக்கு விளம்பரம் தேடும் உத்திக்கு துணை போயிருக்க வேண்டும்.**

4. அரவிந்த கெஜிர்வால் அவரே ஒப்புக்கொள்வது போல ஒரு **அரசின்மைவாதி மற்றும் சி.ஐ.ஏ ஏஜெண்ட் என குற்றம்சாட்டப்படுபவர்** தனது எஜமானர்களால் அகஸ்டா வெஸ்ட்லான்ட் ஊழலில் இருந்து மக்கள் கவனத்தை திசை திருப்புமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். **அகஸ்டா வெஸ்ட் லாண்டிடம் இருந்து 12 வி.வி.ஐ.பி ஹெலிகாப்டர்கள்**

**வாங்குவதற்கான ஒப்பந்தம் தொடர்பான ரூ.3,600 கோடி ஊழலில் இருந்து கவனத்தை திருப்பவே இந்த நாடகம் நடத்தப்பட்டுள்ளது. காங்கிரஸ் தலைவர் மற்றும் அவரது முக்கிய குடும்ப உறுப்பினர்களை நோக்கி கைகாட்டும் முக்கிய இடைத்தரகரை சி.பி.ஐ விசாரிக்க உள்ளது.** இந்த பேரத்தில்,ரோல்ஸ் ராய்ஸ் ஊழல், லுட்யென் ஊழல், நேஷனல் ஹெரால்டு ஊழல், அக்ஸ்டா வெஸ்ட் லாண்ட் ஊழல் ஆகியவை அம்பல்மாகி உள்ளன. இன்னும் என்ன என்ன ஊழல்கள் வெளிவருமோ தெரியாது.

5. **ஏ.ஏ. பி கட்சியின் நாடகம் அஸ்வினி அம்பலமாக்கிய விஷயங்களில் இருந்து கவனத்தை திசைத்திருப்பும் முயற்சியா?** அவரது அறிக்கை காலை 11 மணிக்கு வெளியானது. பகல் இரண்டு மணிக்கு செய்தியாளர் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்ட்து. பிரஸ் கிளப்பில் கூடிய செய்தியாளர்களிடம் அதிருப்தியாளர் அஸ்வினி குமார் உபாத்யா ஏ.ஏ.பி தொடர்பான பல உண்மைகளை அம்பலப்படுத்தினார். கட்சியின் தேசிய குழு உறுப்பினரான அவர், கட்சிக்கு அல்லது குறைந்த பட்சம் கட்சித்தலைமைக்கு அமெரிக்காவின் சி.ஐ.ஏ வுடன் தொடர்பு இருப்பதாக கூறினார். **300 தேசிய குழு உறுப்பினர்களில் 50 பேர் அதிருப்தியில் உள்ளனர் அல்லது விலகி விட்டனர். மார்ச் 4 , ‘ சி.ஐ.ஏ , ஐ.எஸ்.ஐ, ஃபோர்ட் பவுண்டேஷன் மற்றும் வெளிநாட்டு நிதிஉதவி பெறும் இந்திய என்.ஜி.ஓக்கள் மற்றும் தனிநபர்கள் எனும் தலைப்பில் உபாத்யா அனுப்பிய இமெயில் விவரம் வருமாறு;**

6. மதிப்பிற்குறிய ஐயா, பல இந்திய என்.ஜி.ஓ அமைப்புகள் மற்றும் தனிநபர்கள் அமெரிக்காவின் சி.ஐ.ஏ, பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ , அமெரிக்கா என்.ஜி.ஓவான ஃபோர்டு ப்வுண்டேஷன் , என்.ஜி.ஓ ஆவாஸ் மற்றும் வெளிநாடுகளில் இருந்து நேரடியாக் நிதியுதவி பெறுகின்றன. ஃபோர்டு பவுண்டேஷன் மற்றும் வெளிநாடுகளில் இருந்து நிதியுதவி பெறும் பெரும்பாலான இந்திய என்.ஜி.ஓ அமைப்புகள் பிரிவினைவாதிகள், நக்சல்கள்,மாவோயிஸ்டகள், தீவிரவாதிகள், மற்றும் நேரடியாக அல்லது மறைமுகமாக அரசுக்கு எதிராக செயல்படுபவர்களை ஆதரிப்பவர்கள். ஃபோர்டு பவுண்டேஷன் அல்லது வெளிநாட்டு நிதியுதவி பெறும் என்.ஜி.ஓ மற்றும் தனிநபர்கள் சாதி,மதம் மற்றும் சமூக பிரச்சனைகளின்

அடிப்படையில் மக்களை திரட்டி நாட்டின் சமூக நல்லிணக்கம் மற்றும் ஒருமைப்பாட்டிற்கு எதிராக செயல்படுகின்றன. ஃபோர்டு பவுண்டேஷன் மற்றும் வெளிநாடுகளில் இருந்து நிதியுதவி பெறும் பெரும்பாலான இந்திய என்.ஜி.ஓ அமைக்களை சேர்ந்தவர்கள் மற்றும் தனிநபர்கள் , அமெரிக்க சி.ஐ.ஏ மற்றும் பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ சிதியின் ஒரு அங்கமாக மக்களவை மற்றும் சட்டமன்ற தேர்தலில் போட்டியிடுகின்றனர். இந்த தொடர்புகள் மற்றும் இவற்றின் பின்னே உள்ள உண்மைகள் , 2000 முதல் 20012 வரை, ஃபோர்டு நிதி உதவி அளித்த சமூக செயல்பாட்டாளர்கள் மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களை ,ஃபோர்டு க்மு உறுப்பினர்கள் ம் ஃபோர்டு பவுண்டேஷன் இந்தியா பிரதிநிதிகளிடன் விசாரணை நடத்துவதன் மூலம் வெளிச்சத்துக்கு கொண்டு வரலாம்.

7. ஏ.ஏ.பி கட்சியின் அட்மிரல் ( ஓய்வு) லக்ஷ்மிநாராயணன் ராமதாஸ் மற்றும் குடும்பத்தினருக்கு **ஃபோர்டு பவுண்டேஷனுடன் தொடர்பு இருக்கிறது. அட்மிரல் ராமதாசின் மூத்த மகள் கவிதா.என்.ராமதாஸ் ஃபோர்டு பவுண்டேஷனின் தெற்காசிய தலைவர். அடிமிரல் ராமதாசின் மனைவி லீலா ராமதாஸ் விகாஷா நெறிமுறைகள் படி அமைக்கப்பட்ட குழுவின் தலைவர். ராம்தாஸ் , ராமோன் மகாசாசே விருதும் பெற்றுள்ளார். அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு இந்த விருது கிடைக்க உதவியதும் இந்த குடும்பம் தான்.**

8. நாங்கள் ஒரு கட்சியின் கொள்கைக்கு எதிரானவர்கள் அல்ல. நான் அவர்களின் தேசிய திட்ட்த்துக்கு எதிராகவே இருக்கிறேன். ( காஷ்மீர்ம் பாட்லா, தவுகிர்,இஷாரத், 26 ஜன ரிப்ப்ளிக் வியு, நக்சல்கள் ஏ.ஏ.பியில் சேருவதை பாருங்கள்). எல்லோருக்கும் தனிப்பட்ட சுதந்திரமான கருத்து கொண்டிருக்க உரிமை இருக்கிறது, அல்லது குறைந்தபட்சம் அவர்கள் அப்படி சுதந்திரமான கருத்து இருப்பதாக நினைத்துக்கொண்டிருக்கின்றனர். ஆனால் செங்கல் மற்றும் லத்திகளால் உணர்த்தப்படுபவை என்ன மாதிரியான கருத்துக்கள். அவர்கள் சொல்லும் கொள்கை போலியானவை. எல்லாம் வெறும் பேச்சுக்கள் தான், காஷ்மீர், நக்சல்கள் போன்றவற்றில் தேச விரோத கருத்துக்களை தவிர ஆக்கப்பூர்வமாக எதுவும் இல்லை. திலக் நகர் எம்.எல்.ஏ ஜார்நனில் சிங் கல் வீசி ஏறிவது போன்ற புகைப்படங்கள்

உணர்த்தும் ஏ.ஏ.பி கட்சியினரின் செயல்கள் உங்களுக்கு மகிழ்ச்சியானதா என்று இந்த கட்சிக்கு நிதியுதவி அளித்தவர்களை கேட்க விரும்புகிறேன்.

(ஈ.ஆர். அருண்குமார் ஜெயின் )

அலுவலக

செயலாளர்